
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1140

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

106

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## எம்.சி.ராஜா மசோதாவுக்கு நீதிக்கட்சி ஆதரவு!

1.11.1936 அன்று, 'திருச்செங்கோடு தாலுகா ஜஸ்டிஸ் முதலாவது மாநாடு' ராஜலிங்கம் தியேட்டரில், சிறப்புடன் நடைபெற்றது. மாநாட்டிற்காக சென்னை மாகாண முதலமைச்சர் பொப்பிலி அரசர், சங்ககிரி வழியாக அன்று காலை திருச்செங்கோடு வந்தடைந்தார். திருச்செங்கோடு அரசுப் பள்ளியில் இருந்து, மாநாட்டுத் தலைவர் பொன்னைய கவுண்டர், 'திவான் பகதூர்' எஸ்.எல்லப்ப செட்டியார், 'போக்ஸ்' துரை ஆகியோர் நகரின் முக்கிய வீதிகள் வழியாக, ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு கவுண்டம்பாளையம் ஜமீன்தார் செங்கோட்டு வேலக்கவுண்டர் மாளிகையை அடைந்தனர். 10 நிமிடங்கள் கழித்து, மீண்டும் புறப்பட்ட ஊர்வலம் மாநாட்டுக் கொட்டகையை அடைந்தது.

ஜஸ்டிஸ் கொடியை ஏற்றிவைத்துப் பேசிய விருதுநகர் முனிசிபல் சேர்மன் வி.வி. ராமசாமி, "எக்காலத்திலும் ஜஸ்டிஸ் கொடி தாழ்வுற்றதில்லை. ஒரு சில காலங்களில் ஒரு சில இடங்களில் ஜஸ்டிஸ் கொடி தோல்வியுற்றிருக்கலாம். ஆனால், அதனை முன்னிட்டு வெகு காலமாக எதற்காகப் பாடுபட்டு வருகிறோமோ, அக்கொள்கைகளை நாம் புறக்கணிக்கப்போவதில்லை" என்றார். மாநாட்டுக்கு சென்னை, சேலம், கோவை, கோபி, ராசிபுரம், ஜலகண்டாபுரம், ஓமலூர், கிருஷ்ணகிரி, ஈரோடு முதலிய இடங்களில் இருந்து 2,500-க்கும் மேற்பட்டோர் வருகை புரிந்திருந்தனர்.

தொடக்கத்தில் சிலர் பாடல்களைப் பாடினர். பின்னர், பொப்பிலி அரசர் மாநாட்டைத் திறந்துவைத்து, ஆங்கிலத்தில் உரையாற்றினார். அதை சி.டி.நாயகம் தமிழில் மொழிபெயர்த்தார். "இனாம் சட்டத்தை வைசிராய் அங்கீகாரம் செய்ததற்காக என் சொந்த ஹோதாவிலும், இங்கு விஜயம் செய்திருக்கும் உங்கள் பேராலும் வைசிராய்க்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார் பொப்பிலி அரசர். பின்னர் பொப்பிலி அரசருக்கு, 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்', 'ஆதி திராவிடர் சங்கம்', முஸ்லிம் சங்கங்கள் சார்பாகப் பாராட்டுப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. அந்தக் கடிதங்களுக்குப் பதிலளித்துப் பேசிய பொப்பிலி அரசர், 'விடுதலை' இதழ் இன்னும் சில தினங்களில் நாளிதழாக வெளிவரப்போகிறது என்றார்.

அதன்பின்னர், விஸ்வநாதம் முதலியார் வரவேற்புரை வாசித்தார். கூட்டத்தினரின் பலத்த கரவொலிக்கு மத்தியில், மாநாட்டுக்குத் தலைமையேற்றார் பொன்னைய கவுண்டர். மதிய உணவுக்குப் பிறகு மீண்டும் மாலை 3 மணிக்கு மாநாடு கூடியது. சர் பிட்டி தியாகராயர் படத்தை எல்லப்ப செட்டியாரும், டி.எம்.நாயர் படத்தை பெரியாரும், பனகல் அரசர் படத்தை சி.டி.நாயகமும் திறந்துவைத்து அவர்களைப் பற்றி சிற்றுரை ஆற்றினர். அடுத்து, பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'இனாம் பூமி' அனுபவ உரிமைச் சட்டத்தைப் பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையே நிறைவேற்றிய அரசுக்கு நன்றி, தாழ்த்தப்பட்டோருக்கு 12-இல் 1 என இருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை 12-இல் 3-ஆகத் திருத்த வேண்டும், கிராம அதிகாரிகளின் பரம்பரைப் பாத்தியத்தை ஒழிக்க வேண்டும், இந்திய சட்டசபையில் எம்.சி.ராஜா அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும், 'தீண்டாமை ஒழிப்பு மசோதா'வுக்கு ஆதரவு, பள்ளிபாளையத்திற்கும் ஈரோட்டுக்கும் இடையில் காவேரி ஆற்றில் பாலம் கட்டி, போக்குவரத்திற்கும் வியாபாரத்திற்கும் உதவி செய்ய வேண்டும்' என்பது உட்பட 11 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன்பிறகு, மாலையில் நான்கு கால் மண்டபம் பகுதியில் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பலத்த மழை பெய்தபோதிலும் கூட்டம் கலையாமல் இருந்ததால், அருகே உள்ள நாற்பது கால் மண்டபத்திற்குள் தொடர்ந்து நடைபெற்றது. பெரியாரின் எழுச்சியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

**...கூட்டம் திரளும்**

## அக்கறையற்ற ஒன்றிய அரசு!

ஐந்து மாநிலத் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டுவிட்டன, ஒன்றிய பா.ஜ.க. அரசு எவ்விதமான நேரடி உதவித்தொகையோ அல்லது உருப்படியான நிவாரணங்களோ அறிவிக்கவில்லை. இது கடும் கண்டனத்திற்குரியது என சமூக வலைதளங்களில் கருத்துகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

அரசியல் விமர்சகர் விக்னேஷ் எழுதியுள்ள பதிவில், 'சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டால் சாமானிய மக்கள் நிலைகுலைந்து போயிருக்கும் சூழலில், வெறும் 2000 ரூபாய் கூட நிவாரணமாக வழங்க இந்த மோடி அரசு முன்வரவில்லை என்பது, இவர்களின் மக்கள் விரோதப் போக்கையே காட்டுகிறது.

மக்களை உலுக்கும் இத்தகைய வாழ்வாதாரப் பிரச்சினைகளின் போது கூட, தமிழ்நாட்டு மக்களின் துயரைத் துடைக்க ஒரு சிறு முயற்சியைக்கூட ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுக்கவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால், பா.ஜ.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் அ.தி.மு.க., தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவோ அல்லது மக்களுக்கான நிவாரணத்திற்காகவோ ஒன்றிய அரசை வலியுறுத்திப் பெறத் துணிவில்லாமல், வெறும் கையாலாகாத நிலையில் இருப்பது, தமிழ் மக்களுக்குச் செய்யும் மாபெரும் துரோகம்.

இதே பா.ஜ.க. அரசு, பீகார் தேர்தலுக்கு முன்பாக 10,000 ரூபாய் வரை வாரி வழங்கியதை நாடு பார்த்தது. ஆனால், தமிழ்நாட்டுக்கு வரும்போது மட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படுவது ஏன்? தமிழ்நாட்டையும், தமிழர்களையும் கிள்ளுக்கீரைகளாக நடத்தும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் இந்த ஓரவஞ்சனைப் போக்கு, தமிழர்கள்மீது அவர்களுக்கு இருக்கும் உண்மையான அக்கறையைத் தோலுரித்துக் காட்டுகிறது.

தவறான வெளியுறவுக் கொள்கையால் ஒன்றிய அரசு எரிவாயு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, மக்களைத் தவிக்கவிடும் நிலையில், தமிழ்நாட்டில் உணவகங்கள் பாதிக்கப்படாமல் இருக்கவும், விலைவாசி உயராமல் தடுக்கவும், மின்சார அடுப்புகளைப் பயன்படுத்தும் உணவகங்களுக்கு யூனிட்டுக்கு 2 ரூபாய் மானியம் வழங்கி, தமிழ்நாடு மின்வாரியம் அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஒன்றிய அரசு கைவிட்டாலும், தமிழ்நாடு தி.மு.க. அரசு மக்கள் நலனில் அக்கறை கொண்டதால் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது,' என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### செய்யாறு நகரில் தளபதி



வ.அன்பழகன்

1993-ஆம் ஆண்டு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் தலைமையின் கீழ், நான் திருவண்ணாமலை மாவட்ட முதல் இளைஞர் அணி அமைப்பாளராகப் பணியாற்றிய காலம். தளபதி அவர்களை, மாவட்டத்தில் பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க அழைத்துச்சென்றேன். தளபதி அவர்கள், செய்யாறு பொதுப்பணித் துறை பயணியர் விடுதியில் ஓய்வெடுக்கும்போது, இளைஞர் அணி நிர்வாகிகள் புகைப்படம் எடுத்துக்கொண்டோம். நம் கழகத் தலைவர் தளபதி அவர்கள், கடுமையான பயணங்களைக் கடந்து வந்தவர் என்பதை, இந்தப் படம் ஒவ்வொரு முறையும் எனக்குச் சொல்லும்.

**வ.அன்பழகன்,**
**முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், துணைச் செயலாளர்,**
**மாநில விவசாயத் தொழிலாளர் அணி, செய்யாறு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

106

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## ஐந்து ஆண்டுகளில்... ஐம்பது ஆண்டு வளர்ச்சி!

இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் தேதியை அறிவித்துள்ளது. 23.04.2026 அன்று ஒரே கட்டமாக தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெற இருக்கிறது. கழகத் தலைவர் தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி 200 + தொகுதிகளில் வென்று மீண்டும் திராவிட மாடல் ஆட்சி தொடரும் என்ற முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

இந்த நிலையில் நம் முன் இருக்கும் கடமை ஒன்றே ஒன்றுதான். மக்கள் போற்றும் இந்த மகத்தான ஐந்தாண்டு கால ஆட்சியின் சாதனைகளையும் நாம் செயல்படுத்தி இருக்கும் திட்டங்களையும் மக்களிடையே விளக்கமாக எடுத்துச்சொல்வது. அவற்றை அனைவருக்கும் கொண்டுசேர்ப்பது.

இதனை செவ்வனே செய்யும் வகையில், தமிழ்நாடு அரசின் ஐந்தாண்டுக்கால சாதனைச் சரித்திரத்தை, துறை வாரியாக மிக விரிவாகவும் அருமையாகவும் தொகுத்து வெளியிட்டுள்ளது தமிழரசு இதழ். 'மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள் 2021-26' எனும் இந்த நூல் ஒரு மிகப் பெரிய தேர்தல் கையேடு.




துறை வாரியாக நம் திராவிட மாடல் அரசு எத்தகைய சிறப்பான பணிகளை மேற்கொண்டது என்பதை 14 ஆளுமைகள் கட்டுரைகளாகத் தீட்டி இருக்கின்றனர். 'எல்லாருக்கும் எல்லாம்' என்ற சமூக நீதி கோட்பாட்டை இதயமாகக் கொண்டு செயல்படும் இந்த ஆட்சியில் பொருளாதாரம், மகளிர் மேம்பாடு, தொல்லியல், நலிவடைந்தோர் நலன், விளையாட்டு, இளைஞர் நலன், தொல்லியல், தமிழ் வளர்ச்சி என பல துறைகளில் எத்தகைய செயல்களைப் புரிந்துள்ளது என்று ஆழமும் அகலமும் நிறைந்த கட்டுரைகளை 14 துறைசார் ஆளுமைகள் எழுதி இருக்கின்றனர்.

இவைமட்டுமின்றி, மாண்புமிகு முதலமைச்சர் தொடங்கி திராவிட மாடல் அரசின் 34 அமைச்சர்களும் தங்களது துறைகளில், இந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொண்ட பணிகளைப் புள்ளிவிவரங்களுடன் விரிவாக விளக்கி எழுதி உள்ளனர். 915 பக்கங்களில் நம் அரசின் சாதனைகளை வாசிக்கும்போது பெரும் வியப்பு மேலிடுகிறது.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டை நம்பர் - 1 மாநிலமாக உயர்த்தி, பிற மாநிலங்களும் போற்றும் வகையில், சீர்மிகு மக்கள் நலத்திட்டங்களைத் துறை வாரியாக அறிந்துகொள்ள மிகப்பெரும் ஆவணமாக இந்த நூல் திகழ்கின்றது. தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடாமல், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியைத் 'திராவிட மாடல் அரசு' எப்படி சாத்தியப்படுத்தியது என்பதை இந்த நூலைப் படிப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமை யிலான 'திராவிட மாடல் அரசு' பொறுப்பேற்ற நாள் முதல் நிறைவேற்றப்பட்ட திட்டங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த 'சாதனை மலரினை' அனைவரும் தவறாமல் படித்துப் பயன்பெற வேண்டும். முக்கியமாக, கழகத்தின் தேர்தல் அறிக்கைபோல மக்களிடம் அதிகம் கொண்டுசேர்க்க வேண்டும்.

**...வாசிப்போம்.**

## நம் வரலாறு

### போர் நிதியிலும் முன்னிலை!

1971-ஆம் ஆண்டு, இந்தியா - பாகிஸ்தான் போர் நிதியாக தமிழ்நாட்டின் சார்பில், 1972-ஆம் ஆண்டு மே மாதம், அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில், ஆறு கோடி ரூபாயை வழங்கினார் முதலமைச்சர் கலைஞர். முதலில் ஐந்தரை கோடி ரூபாய்தான் தமிழ்நாட்டின் சார்பில் அளிக்கப்படும் என அறிவித்திருந்தாலும், விழாவின்போது ஆறு கோடி ரூபாய் அளித்தார். அப்போதுவரை இந்தியா முழுவதும் 25 கோடி ரூபாய்தான் போர் நிதியாகத் தரப்பட்டிருந்தது. அதில், நான்கில் ஒரு பங்கினை தமிழ்நாடு தந்தது என்ற பெருமையினைப் பெற்றது கழக அரசு.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131